செ.வெ.எண்:43 நாள்: 26.07.2021

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்**

**வாராந்திர காணொளி குறைதீர் கூட்டம்**

**மாவட்ட ஆட்சியர் மருத்துவர். அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாராந்திர காணொளி குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் மருத்துவர். அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வாராந்திர காணொளி குறைதீர்க்கும் கூட்டத்தில் வங்கிக் கடன் மற்றும் உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து காணொளி காட்சி மூலம் 17 மனுக்களும், மனு பெட்டி மூலமாக குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு, கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து 67 மனுக்கள் என மொத்தம் 84 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மருத்துவர். அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வி. சகிலா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எம்.குணசேகரன், தனித்துணை ஆட்சியர் (சமூகப்பாதுகாப்புத் திட்டம்) திரு.கு.ராஜன் மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**